செ.வெ.எண்:452 நாள்:03.09.2019

**மழை நீர் குறித்து ஒவ்வொருவரும் விழிப்புணர்வு பெறவேண்டும் பனை மரங்களை அதிக அளவில் நட்டு வளர்க்க வேண்டும் என சங்கரன்கோவிலில் நடைபெற்ற நீர்மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பெருவிழாவினை தொடங்கி வைத்த மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் வேண்டுகோள்.**

திருநெல்வெலி மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள ஸ்ரீகிருஷ்ண மண்டபத்தில் திருநெல்வேலி வேளாண் அறிவியல் விவசாயிகள் விழிப்புணர்வு விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பங்கேற்று விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை இன்று (03.09.2019) வழங்கினார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

எதிர்கால சந்ததியினருக்கு குறைவில்லா குடிநீரை வழங்கிட மரக்கன்று வளர்ப்பு குடிமராமத்து பணிகள் ஆகியவற்றை தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறது. பொது மக்களும் விவசாயிகளும் இந்த குடிமராமத்து பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டு நீர்நிலைகளை பேணி பாதுகாத்திட வேண்டும் பனை விதைகளை அதிக அளவில் நட்டு வளர்க்க வேண்டும் உழவு தொழிலை மேம்படுத்திட அரசு பல்வேறு முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு குறிப்பாக இயற்கை பொய்த்தாலும் விவசாயிகள் தொடர்ந்து விவசாயம் செய்திட ஏதுவாக உரம், இடுபொருட்கள், நுன்உட்டசத்து நீரேற்றும் கருவிகள் குழாய்கள் அதையும் மானியத்தில் சிறப்பு தொகுப்பு திட்டம் வாயிலாக வழங்கி வருகிறது. கூட்டுக்குழுக்களாக தங்களை வேளான் பதிவு செய்து நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இத்தகைய அறிய வாய்ப்பினை ஒவ்வொரு விவசாயிகளும் முழுமையாக சார்ந்து வேளாண்மையை ஜீவனுள்ள தொழிலாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு குறித்த கண்காட்சி அரங்கினை துவக்கி வைத்து, நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கையேட்டை வெளியீட்டு, விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, நீர் மேலாண்மை விழிப்புணர்வு தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, வேளாண் இணை இயக்குநர்,திரு.அற்புதம், தோட்டக்கலை துணை இயக்குநர், திரு.முருகன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர், திருமதி.ஸ்ரீமதி, மாவட்ட வளாச்சி மேலாளர் திருமதி.எப்.சலிமா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.செந்தில், முனைவர்.ஆறுமுகசாமி, பேராசிரியர் மற்றும் தலைவர், நெல் ஆராய்ச்சி நிலையம் முனைவர் நயினார், பேராசிரியர் மற்றும் தலைவர், எலுமிச்சை ஆராய்ச்சி நிலையம், வன்னிக்கோனேந்தல் திரு.ஜெ.சுகுமார், உழவியல் தொழில்நுட்ப வல்லூநர் திரு.திருமலைகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**